வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu


Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 31.05.2025 சனிக்கிழமை இதழ் : 151 பக்கங்கள் : 12




### தமிழ் அரசு - காங்கிரஸ் சந்திப்பு:

# புதிய உடன்பாடுகள் எதுவும் எட்டப்படாமலேயே நிறைவு!

## சபைகளில் முன்னிலையான கட்சி ஆட்சியமைக்க ஆதரவு



யாழ்ப்பாணம், மே 31

**இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் நேற்றைய சந்திப்பு உள்ளூராட்சி சபைகளில் முன்னிலை வகிக்கும் கட்சி ஆட்சியமைக்க ஆதரவளிப்பது என்று இரு கட்சிகளும் முன்னர் அறிவித்த அறிவிப்புகளுக்கு மேலாக எந்த இணக்கப்பாடும் எட்டப்படாமலேயே நிறைவடைந்தது.**

இந்த இரு கட்சிகளினதும் தலைவர்களின் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை கொக்குவிலில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

சுமார் இரண்டு மணி நேரம் நீடித்த இந்த சந்திப்பில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இந்த சந்திப்பு தொடர்பில் அகில இலங்கை தமிழ்

11



## சீரற்ற காலநிலை; 8,164 பேர் பாதிப்பு!

### மூவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 31

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட 21 மாவட்டங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 249 குடும்பங்களை சேர்ந்த 8 ஆயிரத்து 164 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சரின் பேரிடர் முகாமைத்துவ பிரிவின் கூடுதல் செயலாளர் கே. ஜி. தர்மதிலக தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவலை தெரிவித்தார்.

11

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள்:

## அரசு முன்னெடுக்கும் விசாரணை எங்களுக்கு நம்பிக்கை தருகிறது!

### கர்தினால் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, மே 31

உயிர்த்த ஞாயிறு தின (ஈஸ்டர்) தாக்குதல்கள் குறித்து தற்போதைய அரசாங்கம் நடத்திவரும் விசாரணை தொடர்பில் இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றின் மூலம் இதனை அவர் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

2019ஆம் ஆண்டு நடந்த உயிர்த்த ஞாயிறு தின

11

## பிள்ளையானின் கட்சி பணிமனைக்குள் சி. ஐ. டி.யினர் பல மணிநேரம் சோதனை!



- லியோன் அன்ரன் -

மட்டக்களப்பு, மே 31

பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைமை பணிமனையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த சி. ஐ. டியினர் அதனை பல மணிநேரம் சோதனையிட்டனர். நேற்று முற்பகல் 11 மணிக்கு கட்சி பணிமனை சி. ஐ. டியினரின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது. இந்நிலையில், நேற்றிரவும்கூட (இந்த செய்தி எழுதப்படும்வரை) சி. ஐ. டியினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

மட்டக்களப்பு,

11

## நாங்கள் இறப்பதற்கு முன்னர் எமக்கு நீதியை வழங்குங்கள்!

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்



வவுனியா, மே 31

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று அறியாமலே பலர் மரணித்தனர். எஞ்சியுள்ள நாங்களும் இறக்கும் முன்னர் எமக்கான நீதி கிடைக்கவேண்டும் - இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்றைய தினம் வவுனியா பேருந்து நிலையம் முன்பாக கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். இதன் பின்னர் ஊடகங்களிடம் பேசியபோதே

11

## சிக்குன்குனியா, டெங்கு நோயாளர் அதிகரிப்பு!

கொழும்பு, மே 31

நாட்டில் இதுவரை 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்களும் 500இற்கும் மேற்பட்ட சிக்குன்குனியா நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோய் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் அனுஜா வீரசிங்க தெரிவித்துள்ளார்.

டெங்கு, சிக்குன்குனியா பரவல் தொடர்பில் இலங்கை மருத்துவ சங்கம் நடத்திய செய்தியாளர்

11

## கிருமி தொற்றால் குழந்தை மரணம்!

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், மே 31

சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட 3 மாத குழந்தை கிருமித் தொற்று காரணமாக உயிரிழந்தது.

சங்கானை - நிற்சாமம் பகுதியைச் சேர்ந்த திகாசன் அபிசிறி என்ற குழந்தையை இவ்வாறு உயிரிழந்தது.

11



## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் நேற்று நடைபெற்றது!

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திக்கான ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கடற்றொழில் அமைச்சரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர், இணை தலைவரான வடக்கு ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோரின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, நடப்பு ஆண்டுக்கான

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருக்கேதீச்சரத்தில் இன்று கொடியேற்றம்!

## யாழிலிருந்து சென்றது கொடிச்சீலை

யாழ்ப்பாணம், மே 31

வரலாற்று பிரசித்தி பெற்றதும் பாடல் பெற்ற தலமுமான மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இதற்கான கொடிச்சீலை யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றைய தினம் எடுத்துச் செல்லப்பட்டது. கொடிச்சீலை உபயகாரரான சண்முகநாதன் கபிலனின் வீட்டிலிருந்து கொடிச்சீலை திருநெல்வேலி வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்துக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிறப்பு பூசை வழிபாடுகள் நடைபெற்றன.



இதனைத் தொடர்ந்து, கொடிச்சீலை திருக்கேதீச்சர ஆலயத்துக்கு வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டது.

1982ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்தே செங்குந்தர் மரபினரால் திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கு கொடிச்சீலை வழங்கப்பட்டது. போர் காலத்தில் நின்றுபோன இந்த பாரம்பரியம், 2022ஆம் ஆண்டு திருக்கேதீச்சரம் ஆலய கும்பாபிஷேகம் நடைபெற்றதைத் தொடர்ந்து, சுமார் 40 வருடங்களுக்குப் பின்னர் 3ஆவது முறையாக இந்த ஆண்டும் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆனையிறவு உப்பு தொழிற்சாலைக்கு அமைச்சர் கண்காணிப்பு பயணம்!

கிளிநொச்சி, மே 31

ஆனையிறவு உப்பு உற்பத்தி தொழிற்சாலைக்கு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் திடீர் கண்காணிப்பு பயணம் சென்றுள்ளார்.

இதன்போது, அவர் தொழிற்சாலையை பார்வையிட்டதுடன், குறித்த தொழிற்சாலையில் நிலவி வரும் குறைபாடுகள் தொடர்பில் முகாமையாளரிடம் கேட்டறிந்ததோடு, அதனை உடனடியாக தீர்க்கும் வகையிலும், தேவையான வசதிகளை செய்து கொடுக்கவும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தியுடன் கலந்துரையாடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், அங்கு பணிபுரியும், அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை நிவர்த்திக்கும் முகமாக தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலின் போது, தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன் ஆகியோரும் உடனிருந்தனர். (ஐ)

# நானுஓயாவில் மண்சரிவு; 120 பேர் இடம்பெயர்ந்தனர்!

நுவரெலியா, மே 31

நுவரெலியா பிரதேச செயலகத்தின் கீழ் இயங்கும் நானுஓயா - சமர்செட், லேங்டல் தோட்டத்தில் தொடர் லயன் குடியிருப்பில் ஏற்பட்ட மண்சரிவால் 28 குடும்பங்களை சேர்ந்த 120 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்கள் தற்காலிகமாக நானுஓயா கார்லபேக் தமிழ் வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இப்பகுதிக்கு பொறுப்பான கிராம சேவகர் சம்பவத்தை நேரில் பார்வையிட்டதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் தெரிவித் தார்.

மேலும் தோட்ட நிர்வாகத்தினர் மக்களை சந்தித்து நிலைமையை விசாரித்ததோடு, நிவாரண உதவிகளையும் மாற்று நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

மண்சரிவால் சில வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. எனினும், எவருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சட்டவிரோத மதுபானத்துடன் இரு இளைஞர்கள் கைது!

கொழும்பு, மே 31

சட்டவிரோத மதுபானத்துடன் இளைஞர்கள் இருவர் பொலிஸாரால் நேற்று வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

கம்பஹா - பமுனுகம பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் அதே இடத்தைச் சேர்ந்த 24, 29 வயது நபர்களாவர்.

சந்தேகநபர்களில் ஒருவரிடமிருந்து 3 ஆயிரம் லீற்றர் சட்டவிரோத மதுபானமும் மற்றவரிடமிருந்து 750 லீற்றர் சட்டவிரோத மதுபானமும் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பமுனுகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# துஷிதவுக்கு விளக்கமறியல்!

கொழும்பு, மே 31



தேசிய லொத்தர் சபையின் முன்னாள் பணிப்பாளர் துசித ஹல்லொலுவவை எதிர்வரும் ஜூன் 02ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான அரச சொத்துகளை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச் சாட்டின் பேரில் துசித ஹல்லொலுவ நேற்று கைது செய்யப்பட்டார்.

அவர் நேற்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டமையை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், மே 31

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் திருவிழாவில் ஜூன் 4ஆம் திகதி புதன்கிழமை மாலை 06.30 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை மாலை 06.30 மணிக்கு திருக்கைலாச பர்வத காட்சியும் நடைபெறும்.

07 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 06.30 மணிக்கு சப்பை ரதத் திருவிழாவும் அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 09 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 09 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6.30 மணியளவில் கொடியிறக்கமும் நடைபெறும்.

காலை உற்சவம் காலை 07.30 மணியளவிலும், மாலை உற்சவம் மாலை 05.30 மணியளவிலும் ஆரம்பமாகுமென ஆலய ஆதீன கர்த்தாக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# மின் வேலியில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, மே 31

மின்சார வேலியில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் -ஹெட்டிபொல பொலிஸ் பிரிவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த 49 வயது நபரே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் 50 வயது நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# கலைவிழா

யாழ்ப்பாணம், மே 31

ஈழத் தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் யாழ். பிராந்தியம் நடத்தும் கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த கலைவிழாவில் தென்னிந்திய தொலைக்காட்சி புகழ் ஈழத்து பாடகர்கள் உட்பட பலர் பங்கேற்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



31
சனிக்கிழமை
மே 2025
மாலை 4 மணி



1950 – 2025

எழுத்தாளரும் ஈழப் போராட்ட முன்னோடிகளில் ஒருவருமான

தோழர்
புஷ்பராணி

நினைவஞ்சலியும் நூல் வெளியீடும்

தொடக்கவுரை எழுத்தாளர் தர்மு பிரசாத்
நினைவுப் பேருரை தோழர் நவரட்ணராணி
நூல் வெளியீட்டுரை எழுத்தாளர் ஷோபாசக்தி
முதற்பிரதி ஏற்பு தோழர் ஆன் சரத்மதி • தோழர் போல் பிரகலாதன்
நூல் மதிப்புரை எழுத்தாளர் சி. மனோகரன்

நினைவுரைகள்

• தோழர் அழகிரி • தோழர் ராகவன் • தோழர் வதனராணி • தோழர் தேவதாசன்
• தோழர் சாந்தன் தம்பையா • தோழர் தரங்கினி • தோழர் உதயகுமார்
• தோழர் சோலையூரான் • பத்திரிகையாளர் துரைசிங்கம் • எழுத்தாளர் தர்மினி
• எழுத்தாளர் அகரன் • எழுத்தாளர் டானியல் ஜெயந்தன் • தோழர் வானிலா
• மற்றும் நீங்களும்

நன்றியுரை தோழர் விதுரன் புஸ்பராஜா

இடம்: 1 Rue Fernand Picquette, 95470 Fosses.
Station: Survilliers fosses. Direction : Orry-la-Ville - RER D 35 min from Gare du Nord

அனைவரையும் தோழமையுடன் அழைக்கும் புஷ்பராணி குடும்பத்தினர் • ஆக்காட்டி இதழ்
தொடர்புகளுக்கு: நவரட்ணராணி – +447588581637 | செந்தில் – 0646482832 | தர்மு பிரசாத் – 0652337584

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
31.05.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மாகாண சபைக்காக நீங்கள் செய்தது என்ன?

மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வருவதானது மாகாண சபை அதிகாரத்தை மத்திய அரசு கையகப்படுத்தும் முயற்சியாகவே அமையுமென்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்திருக்கிறார். சத்தியலிங்கத்தின் அவதானம் சரியானதுதான்.

அதாவது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவான மாகாண சபை நிர்வாகம் ஒன்றுதான். இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஒரேயோர் அதிகார பகிர்வு ஏற்பாடு. வடக்கு, கிழக்கை தங்களின் வரலாற்று வாழ்விடமாகக் கொண்டிருக்கும் ஈழத்தமிழ் மக்கள் இலங்கையின் அதிகாரத்தில் பங்கு கொள்வதற்கு இருக்கும் ஒரேயொரு ஏற்பாடும் மாகாண சபை மட்டும்தான். ஆனால், மாகாண சபை முறைமை அறிமுகமான காலத்திலிருந்து, மாகாண சபையின் அதிகாரங்களை வலுவிழக்கச் செய்யும் காரியங்களையே மத்திய அரசு மேற்கொண்டு வந்திருக்கிறது.

1988இல் முதலாவது மாகாண சபைகள் தேர்தல் நடைபெற்றதைத் தொடர்ந்து வடக்கு, கிழக்குக்கான அதிகார அலகு நடைமுறைக்கு வந்தது. ஆனால், ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாக பதவியேற்றமையை தொடர்ந்து, மாகாண சபையை பலவீனப்படுத்தும் நோக்கில் மாகாண சபைக்கான அதிகாரங்கள் சிலதை மீண்டும் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார். மாகாண சபையை பலவீனப்படுத்தும் நோக்கில் அன்று பிரேமதாஸவால் ஆரம்பிக்கப்பட்ட அரசியல் நகர்வுகள் இன்றுவரையில் தொடர்கின்றன.

இந்த இடத்தில் முன்வைக்கப்பட்ட கேள்வி சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்பானது அல்ல. மாறாக, தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுப்பதாக கூறி வரும் தமிழ் கட்சிகள் தொடர்பானது. மாகாண சபை முறைமையை பாதுகாக்க - பலப்படுத்துவதற்காக தமிழ் கட்சிகள் எவ்வாறான முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன? இலங்கை தமிழ் அரசு கட்சி மேற்கொண்ட அரசியல் முன்னெடுப்புகள் என்ன?

மாகாண சபை முறைமை அறிமுகமான காலத்திலிருந்து அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை ஒரு தீர்வாக ஏற்றுக்கொள்ளவில்லை என்னும் கோஷம்தான் அனைத்து தமிழ் கட்சிகளினதும் பிரதான தேர்தல் மேடைக் கோஷமாக இருந்தது - இப்போதும் இருக்கிறது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், கொழும்பின் ஆட்சியாளர்கள் மாகாண சபை முறைமையை எவ்வித எதிர்ப்புமின்றி இலகுவாக பலவீனப்படுத்தினர்.

மாகாண சபை முறைமை என்பது அடிப்படையில் இந்தியாவிலுள்ள அதிகாரப் பகிர்வு முறையாகும். இந்தியாவின் மாகாண ஆட்சி முறைமையானது அதிகாரப் பகிர்வுக்கான மிகவும் சிறந்த முன்னுதாரணமாக திகழ்கிறது. ஆனால், அந்த முறைமை இலங்கையிலோ தொடர்ந்தும் தோல்வியடைந்த ஒரு முறையாகவே காட்சிப்படுத்தப்படுகிறது. இதற்கு என்ன காரணம்? சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில் வடக்கு, கிழக்குக்கான பிரத்தியேக அதிகாரப் பகிர்வு ஏற்பாட்டை பலவீனப்படுத்த வேண்டும் என்பது அவர்களின் கட்சிகளை கடந்த அணுகுமுறையாக இருக்கிறது. மறுபுறம் மாகாண சபைக்காக போராட வேண்டிய லொபியை முன்னெடுக்க வேண்டிய தமிழ் கட்சிகளோ வெறும் சுலோகங்களை உச்சரிப்பதில் திருப்தி கொள்ளும் தரப்புகளாக இருப்பதானது பிறிதொருபுறம் மாகாண சபை முறைமையை தொடர்ந்தும் வினைத்திறனற்ற அதிகார கட்டமைப்பாக பேணிப் பாதுகாக்கும் கொழும்பின் முயற்சிகளுக்கு மறைமுகமாக உறுதுணையளிப்பதாகவே இருக்கிறது.

வடக்கு, கிழக்கில் மாகாண சபை முறைமையை பலவீனப்படுத்துவதில் சிங்கள ஆட்சியாளர்களும் அவர்களை எதிர்ப்பதாகக் கூறிக்கொள்ளும் தமிழ்த் தேசிய கட்சிகளும் ஒரு நேர்கோட்டில்தான் பயணித்திருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் மாகாண சபையை மத்திய அரசாங்கம் பலவீனப்படுத்துவதாக குரலெழுப்புவது தர்க்க ரீதியில் பலவீனமான வாதமாகும். மாகாண சபையை பாதுகாக்க - பலப்படுத்த வேண்டுமாயின், அதனை பாதுகாக்க வேண்டிய தேவையுள்ள தமிழ் கட்சிகள் உள்ளேயும் வெளியேயும் அரசியல் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதேபோன்று, இலங்கையின் சட்ட ஏற்பாடுகளை பயன்படுத்தியும் போராட வேண்டும். இன்றும் இந்தியாவிலுள்ள மாநிலங்கள் அதிகாரத்தை பலப்படுத்துவதற்காக சட்டரீதியில் போராடிக் கொண்டுதான் இருக்கின்றன.

# மகிந்தானந்த, நளின் சிறை மருத்துவமனையில்!

கொழும்பு, மே 31

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்களான மகிந்தானந்த அளுத்கமகே, நளின் பெர்னான்டோ ஆகியோர் வெலிக்கடை சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சர்கள் இருவருக்கும் எதிராக மேல் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்ததன் பின்னர் அவர்களிருவரும் மருத்துவ பரிசோதனைக்காக நேற்று முன்தினம் சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இருவருக்கும், கைதிகளுக்கான ஆடை, தலையணை, படுக்கை விரிப்பு என்பன வழங்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலை ஊடக பேச்சாளர் காமினி பி திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேநேரம் நீதிமன்றம் அவர்கள் இருவருக்கும் கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளதன் பிரகாரம் சிறைச்சாலைக்குள் அவர்களுக்கு நேற்று முதல் வேலை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சிறைச்சாலை அச்சகத்தில் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ரி. ஐ. என். இலக்கத்தை இலகுவாக பெற கியூ. ஆர். குறியீடு அறிமுகம்

கொழும்பு, மே 31

வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தை (ரி. ஐ. என்.) பதிவு செய்யும் முறையை இலகுவாக்குவதற்காக கியூ. ஆர். குறியீடு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆர். பி. ஜி. எச். பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த கியூ. ஆர். குறியீட்டை பயன்படுத்தி ஏற்கனவே ரி. ஐ. என். இலக்கத்தை பதிவு செய்தவர்களும் தங்கள் பதிவை சரிபார்த்துக் கொள்ள முடியும்.

அவ்வாறு இல்லையெனில், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தை தொடர்பு கொள்வதன் மூலம் அதை எவ்வாறு பெறுவது என்பது குறித்து அறிந்துகொள்ளலாம்.

வரி நிர்வாகம் மற்றும் இணக்கத்தை மேம்படுத்துவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக ஒரு கோடிக்கும் அதிகமான ரி. ஐ. என். இலக்கங்கள் பொதுமக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## போதைப்பொருள் கடத்தல் நபர் பொலிஸாரின் சூட்டில் காயம்!

கொழும்பு, மே 31

பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் போதைப் பொருள் கடத்தல்காரரான "மஹவெலமுல்ல ஷான் சுத்தா" என அழைக்கப்படும் சம்பத் குமார என்பவர் காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் துப்பாக்கிச்சூடு நேற்று வெள்ளிக்கிழமை மொனராகலை - வெல்லவாய பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வெல்லவாய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்றைய தினம் விசேட நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, போதைப் பொருள் கடத்தல்காரரான "மஹவெலமுல்ல ஷான் சுத்தா" என்பவரிடமிருந்து போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. இதையடுத்து பொலிஸார் அவரை கைது செய்ய முயன்றுள்ளனர்.

அப்போது அவர், கூரிய ஆயுதங்களால் பொலிஸாரை தாக்கியுள்ளார். இதையடுத்து, பொலிஸார் அவரின் காலில் துப்பாக்கியால் சுட்டு கைது செய்யப்பட்டார்.

காயமடைந்த அவர் மொனராகலை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## பேருந்து விபத்தில் மூவர் காயம்

கொழும்பு, மே 31

வீதியிலிருந்து விலகிய பேருந்து வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள், மரத்தை மோதியதில் மூவர் காயமடைந்தனர்.

குருநாகல் - வாரியபொலவில் அநுராதபுரம் வீதியில் இந்த விபத்து நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த மூவரே காயமடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக வாரியபொல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே - 31 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 17
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : பஞ்சமி




**மேடம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு உதவியாக இருப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**கடகம்**
எதிர்காலம் பற்றிய பயம் வீண்டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும்.

**சிம்மம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**கன்னி**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். விஐபிகள் உதவுவார்கள். வாகன வசதி பெருகும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் ஈகோ பிரச்னை வந்து நீங்கும்.

**தனுசு**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடைஆபரணம் சேரும். தாயாரின் உடல் நலம் சீராகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மகரம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும்.

**கும்பம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். பிள்ளைகளின் புது முயற்சிகளை ஆதரிப்பீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள்.

தென்னை மரங்களை பாதிப்புக்குள்ளாக்கும்

# வெண் ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த வேப்பெண்ணெய் தெளிக்க திட்டம்

யாழ்ப்பாணம், மே 31

தென்னை மரங்களை பாதிப்புக்குள்ளாக்கும் வெண் ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த தென்னை மரங்களுக்கு 15 தெளிகருவிகள் மூலம் வேப்பெண்ணெய் தெளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய குழுக் கூட்டம் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு,

1. வேலணையில் வீதிப் புனரமைப்பு செய்யப்பட்ட போது உரிய வடிகாலமைப்பு மேற்கொள்ளாத காரணத்தால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய - வாய்க்கால்கள் அமைப்பது தொடர்பான பூர்வாங்க அறிக்கையை பிரதேச செயலாளர் விரைவில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் கலந்துரையாடி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

2.தீவகப்பகுதிகளில் கட்டாக்காலி மாடுகள் தொடர்பில் பிரதேச சபையினரும் கமநல சேவைகள் திணைக்களமும் உரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

3.வேலணையில் மிளகாய் செடி இலைகளின் மீதான நோய்த் தாக்கத்தால் (பூச்சி மற்றும் வைரஸ் தாக்கம்) இலைகள் சுறுளடைவதாகவும் இதற்கான தீர்வு தேவை எனவும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய கிருமிநாசினிகளை பயன்படுத்தலாம் எனவும் எல்லைப் பயிர் மற்றும் பாதுகாப்பு வேலி அமைத்தும் மிளகாய் உற்பத்தியை பாதுகாக்கலாம் எனவும் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்ட உடுவில் பிரதேச விவசாயி ஒருவர் மிளகாய் உற்பத்தியில் வெற்றியடைந்துள்ளதால் அவரின் விவசாய இடத்தை பிரதி விவசாயப் பணிப்பாளர், வேலணை பிரதேச விவசாயிகளுடன் சென்று பார்வையிட்டு அனுபவத்தை பகிர்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

4.உசன், கரம்பகம் எழுதுமட்டுவாழ் விவசாய நிலங்களில் ஏற்படும் வெள்ளத்தால் விவசாயம் பாதிக்கப்படுவதால் வாய்க்கால் அமைத்து நீரோட்டத்தினை பாய்ச்சுவதற்கான மதிப்பீட்டினை மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

5.மேட்டுக் காணிப் பயிர்களுக்கான உர மானியம் வழங்குமாறு விவசாயிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைய சுமார் 2000 ஹெக்டேயர் மேட்டுக்காணிக்கு ஒரு ஹெக்டேயருக்கு 15000 ரூபாய் வீதம் வழங்கக் கோரிய விவசாயிகளின் கோரிக்கையை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முன்வைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

6. குடத்தனை வலிகண்டியில் குப்பைகளை கொட்டுவதை நிறுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டதுடன் இதனை பருத்தித்துறை பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச, நகர சபை செயலாளர்கள் உறுதிப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டது.

7.இந்திய அரசினால் வழங்கப்பட்ட உழவியந்திரங்களில் தற்போது பயன்பாட்டில் உள்ள உழவியந்திரங்கள் மற்றும் பழுதடைந்துள்ள உழவியந்திரங்களின் முழுமையான விவரங்களுடன் யூன் மாதம் 30 ஆம் திகதி கலந்துரையாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

8.விவசாய நவீன மயமாக்கல் செயல்திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பயனாளிகளின் முழுமையான விவரங்களை பெற்று அதனை பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பிவைப்பது எனவும், இதன் மூலம் இத் திட்டத்தில் வெற்றியடைந்த மற்றும் தோல்வி அடைந்தவர்களை இனங்கான முடியும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

9.தென்னை மரங்களை பாதிப்புக்குள்ளாக்கும் வெண் ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த தென்னை மரங்களுக்கு 15 தெளிகருவிகள் மூலம் வேப்பெண்ணெய் தெளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் முதற்கட்டமாக சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவுகளில் யூன் மாதம் 09 ஆம் திகதியிலிருந்து 14 ஆம் திகதி வரையும் கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 16 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுகளில் 23 ஆம் திகதியும் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் ஒருங்கிணைப்பில் தென்னை அபிவிருத்திச் சபையின் மேற்பார்வையில் மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

10.பாதீனித்தியத்தை கட்டுப்படுத்த பிரதேச செயலாளர்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் ஒருங்கினைந்து செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட விவசாய பணிப்பாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாகாண விவசாயப்பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், நீர்ப்பாசன பொறியியலாளர், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், வங்கி மற்றும் காப்புறுதி சேவை பிரதிநிதிகள் உள்ளிட்ட துறைசார் உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

(எ)

# “விவசாயத்துறையை வளர்ப்பதற்கு சகலரும் ஒன்றிணைய வேண்டும்”



யாழ்ப்பாணம், மே 31

விவசாயத்துறையை வளர்ப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட விவசாய குழுக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

யாழ். மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை இனங்காணல் மற்றும் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. கடந்த கூட்டத்தில் இளம் விவசாயிகளை அடுத்து கூட்டத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்ற எமது வேண்டுகோளுக்கு அமைய, இந்தக் கூட்டத்தில் இளம் விவசாயிகள் வருகை தந்துள்ளமையானது வரவேற்கத்தக்கது. மேலும், தற்போது அதிகரித்து வரும் தென்னை மரத்தை பாதிக்கும் வெண் ஈ தாக்கம் குறித்தும் அதனைக் கட்டுப்படுத்தும் செயல்திட்டங்கள் குறித்தும் சிறந்த பொறிமுறைகளை கண்டறிய வேண்டும். விவசாயத்துறையை வளர்ப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்- என்றார்.

(எ)

# சமூகங்களின் நலன் மேம்படுத்தும் செயல்திட்டம் பற்றி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 31

பாதுகாப்பும் சமூகங்களின் நலன் மேம்படுத்தும் செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட சமுதாயங்களுக்கும் சேவை வழங்குநர்களுக்கும் இடையே எல்லோரையும் உள்ளடக்கும் ஆட்சி மற்றும் சமூக ஒற்றுமையை வலுப்படுத்தலை நோக்கமாகக் கொண்டு முதற்கட்டமாக யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலகங்களிலிருந்து 20 கிராம அலுவலர் பிரிவுகளில் இந்தத் செயல்திட்டம் சொண்ட் (அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு ) நிறுவனத்தின் அனுசரணையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் எம்.பிக்கள் 20 பேரின் ஊழல்கள் குறித்து விசாரணை!

**பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்**



கொழும்பு, மே. 31

**20 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் ஆகியோரின் கடந்த கால நடவடிக்கைகள் குறித்து விசாரணைகள் இடம்பெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

20 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் ஊழலில் ஈடுபட்டமை குறித்த விசாரணைகளை துரிதப்படுத்துமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்தவிஜயபால இதனை தெரிவித்தார்.

சில ஊழல்கள் பத்து பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றவை. முன்னைய பல அரசாங்கங்கள் அவற்றை அப்படியே மூடிமறைத்துவிட்டன என தெரிவித்துள்ள அவர், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இவற்றை மீண்டும் விசாரணை செய்ய ஆரம்பித்துள்ளது.

சி.ஐ.டியினரை விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளது எனக் குறிப்பிட்டார்.

சி.ஐ.டியினர் விசாரணை செய்து வருகின்ற இந்த ஊழல் மோசடிகள் குறித்து என்னால் மேலும் கருத்து கூறமுடியாது எனத் தெரிவித்துள்ள அமைச்சர், 20 பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகள் குறித்து விசாரணைகள் இடம் பெறுகின்றன.

இவர்களில் சிலர் அமைச்சர்களாகப் பதவி வகித்தவர்கள் என கூறினார்.

சில அதிகாரிகளும் உள்ளனர். அவர்களின் பெயர்களை வெளியிட முடியாது என அவர் குறிபிட்டார். (அ)

# கதிர்காமத்தில் திடீரென தீப்பற்றி எரிந்தது கார்!

கொழும்பு, மே. 31

மொனராகலை - கதிர்காமம் பிரதேசத்தில் வீதியில் பயணித்துக்கொண்டிருந்த கார் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

கார் முற்றாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ரயில் சேவைகளில் தாமதம்

கொழும்பு, மே. 31

புத்தளம் மார்க்கத்திலான ரயில் சேவைகள் தாமதமாகியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தண்டவாளத்தில் மரம் முறிந்து வீழ்ந்தமையின் காரணமாக புத்தளம் மார்க்கத்தில் ரயில் சேவைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.



தண்டவாளத்தில் முறிந்து விழுந்த மரத்தை அகற்றும் பணிகள் நடைபெற்று வருவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# யோஷிதவுக்கு எதிரான வழக்கு ஜூலை 11ஆம் திகதி விசாரணை



கொழும்பு, மே. 31

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராக பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள வழக்கை ஜூலை 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த வழக்கு கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது.

இதன்போது, வழக்குத் தொடுப்புக்காக ஆஜரான மூத்த அரச சட்டத்தரணி உதார கருணாதிலக, வழக்கு தொடர்பான ஆவணத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

பிரதிவாதிக்காக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ், விசாரணையை எதிர்கொள்ளத் தேவையான ஆவணங்கள் மற்றும் சாட்சி அறிக்கைகளின் பட்டியலை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து அவற்றை வழங்குமாறு கோரினார்.

நியாயமான விசாரணையை எதிர்கொள்ள இந்த ஆவணங்கள் மற்றும் சாட்சி அறிக்கைகள் தனக்குத் தேவை என்று ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதன்படி, பட்டியலில் உள்ள ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பிரதிவாதிக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வழக்குத் தொடுப்புக்காக ஆஜரான மூத்த அரச சட்டத்தரணிக்கு நீதிபதி ஆதித்ய படபெந்தி அறிவுறுத்தினார்.

பின்னர் இந்த வழக்கு ஜூலை 11 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது.

யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டி டெய்சி பொரெஸ்ட் ஆகியோர் மீது சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

அவர்கள் சட்டவிரோதமாக சுமார் 73 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள பணம் மற்றும் சொத்துக்கள் சேர்த்துள்ளதாக கூறி மூலம் பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆடை ஆலை மூடப்படுவது சாதாரணமே!

கொழும்பு, மே. 31

ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்படுவது சாதாரண விடயமே என ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

நெக்ஸ்ட் ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்ட விவகாரம் தேவையற்ற வகையில் அரசியல் மயப்ப டுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கைத்தொழிற்சாலைகள் மூடப்படுவதும்திறக்கப்படுவதும் சாதாரண விடயமே இதனை தேவையின்றி அரசியல் மயப்படுத்தக்கூடாது என அவர் கூறினார்.

நிறுவனங்களின் தீர்மானத்துக்கு அமையே இந்த நிறுவனங்கள் மூடப்படுவதாகவும் கடந்த ஆண்டிலும் கொக்கல பகுதியில் ஆடைத்தொழிற்சாலையொன்று மூடப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பாடசாலை வைபவங்களில் அரசியல்வாதிகள் வேண்டாம்

**இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை**

கொழும்பு, மே. 31

அரச பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் அரசியல்வாதிகள் பங்கேற்பதனை தடை செய்யும் சுற்று நிருபத்தை மீளவும் அமுல்படுத்த வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரியவிடம் எழுத்து மூலம் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் நடைபெறும் நிகழ்வுகளில் அரசியல்வாதிகள் பங்கேற்பது அதிகரித்துள்ளதாக ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

இவ்வாறு அரசியல்வாதிகள் பங்கேற்பதனால் பெற்றோருக்கு கூடுதல் செலவு ஏற்படுவதுடன் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் ஆட்சி பொறுப்பினை ஏற்றுக்கொண்டு சிறிது காலத்திலேயே அளித்த வாக்குறுதிகளை மறந்து செயற்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (அ)

# பயங்கரவாதத்துக்கு எதிராகக் கனடா எடுக்கும் நடவடிக்கையை இனப்படுகொலை என்பீர்களா?

**ஹரி ஆனந்தசங்கரியிடம் விஜயதாஸ கேள்வி**



கொழும்பு, மே. 31

கனடாவில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் தோற்றம் பெறுமாயின், அதன் விளைவாக ஏற்படும் உயிரிழப்புக்கள் தொடர்பில் கனேடிய அரசு நடவடிக்கை எடுக்குமாயின், அதனையும் "இனப்படு கொலை" என்று வகைப்படுத்துவீர்களா? என கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியிடம் முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து விஜயதாஸ ராஜபக்ஷவினால் ஹரி ஆனந்த சங்கரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது-

உங்களது தந்தையின் சார்பில் 2002 ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் ஆஜரான நான், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைவராக அவர் பதவி வகிப்பதை வெற்றிகரமாக நியாயப்படுத்தி வென்றேன்.

அதேபோன்று 2004 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் அவரது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டபோது, அவர் தப்பி வந்து எனது வீட்டில் தஞ்சம் புகுந்தார்.

அவருக்குப் பாதுகாப்பு அளித்த நான், அவரை அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் அழைத்துச் சென்றேன்.

எனது வேண்டுகோளின்படி அவர் உங்களது தந்தைக்கு அரச பாதுகாப்பு வழங்கியதுடன், அது சுமார் இரு தசாப்தங்கள் வரை தொடர்ந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் அண்மைய காலங்களில் வெளியிடப்பட்டுள்ள சில கருத்துக்கள் மற்றும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை ஒரு முன்னுதாரணமாகக் காண்பிக்கும் வகையிலான செயற்பாடுகள் தொடர்பில் நான் மிகுந்த அதிருப்தி அடைகின்றேன்.

தமிழீழ விடுதலைப்புலிகளால் சுமார் 60,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன், அவர்களில் சுமார் 27,000 இற்கும் மேற்பட்டோர் இராணுவத்தினராவர்.

அதுமாத்திரமன்றி முக்கிய தமிழ் அரசியல் தலைவர்கள், சமூகத்தலைவர்கள், புத்திஜீவிகள் எனப் பலரும் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டனர்.

பொதுமக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில், கனடாவில் இவ்வாறான அச்சுறுத்தல்கள் தோற்றம் பெறுமாயின், உயிரிழப்புக்கள் தொடர்பில் கனேடிய அரசு நடவடிக்கை எடுக்குமாயின், அதனையும் "இனப்படுகொலை" என்று வகைப்படுத்துவீர்களா?-என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# 16 பொலிஸ் அதிகாரிகளுக்கு உடனடி இடமாற்ற உத்தரவு!

கொழும்பு, மே. 31

நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களின் 16 பொறுப்பதிகாரிகளுக்கு, உடனடி இடமாற்றங்களை இலங்கை பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, தேசிய பொலிஸ் ஆணையத்தின் ஒப்புதலுடன் இந்த இடமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, அவை உடனடியாக நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்தள,தங்காலை, வாதுவ, நிந்தவூர், பன்சியகம, கிளிநொச்சி, பொத்தபிட்டி, கம்பொல, தர்மபுரம், கலன்பிந்துனுவேவ ஆகிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளே மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனை தவிர, பொலிஸின் சட்டப்பிரிவு உட்பட்ட பல முக்கிய பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் அண்மைக்காலமாக தொடர்ந்தும் பொலிஸ் தரப்பில் பல்வேறு இடமாற்றங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சு மூலம் தீர்வு தேவை என்பதை உள்ளூராட்சி தேர்தல் உணர்த்தியது

## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு, மே. 31

**வடக்கு, கிழக்கு பிரச்னைக்கு பேச்சு ஊடாக தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதை உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்கு உணர்த்தியுள்ளன என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

வடக்கில் காணிகளைக் கைப்படுத்துவதற்கு அரசாங்கம் முற்பட்டது. இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலும் வெளியானது. இதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. இவ்வாறு எதிர்ப்புகள் வலுத்ததால் பிரதமல் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதனால் ஏற்படும் அநீதிகளை நாம் சுட்டிக்காட்டினோம்.

அதனை ஏற்றுக்கொண்டு வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் மீளப்பெற்றுள்ளது. இது வரவேற்கக்கூடிய விடயம்.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களின்போது வடக்கு, கிழக்கில் கிடைக்கப்பெற்ற வாக்குகளைவிடவும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் அரசாங்கம் பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது. பிரச்சினைகளுக்கு கலந்துரையாடல்மூலம் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதையே தேர்தல் முடிவுகள் அரசாங்கத்துக்கு உணர்த்தியுள்ளன-என்றார். (அ)

# வரி வாரத்தை அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, மே. 31

"பது சக்தி" என்ற பெயரில் வரி வாரம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் யூ.டி.என். ஜயவீர தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் 2 முதல் 7 வரை ஒரு வார காலத்திற்கு இந்த வரி வாரம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், இதன் மூலம் வரி செலுத்துதல் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இதுவரை 10 மில்லியனுக்கும் அதிகமானவர்களுக்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ரின் (வரி அடையாள இலக்கம்) வழங்கியுள்ளது. ஆனால், இந்த இலக்கங்கள் பல்வேறு தகவல் மூலங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டவையாகும்.

எனவே, மக்களுக்கு நாம் குறிப்பா கக் கூற விரும்புவது, உங்களுக்கு ஏற்கனவே திணைக்களத்தால் ரின் இலக்கம் வழங்கப்பட்டிருக்கலாம். ஆகவே, உள்நாட்டு இறைவரித் திணைக் களத்தின் இணையத்தளத்திற்கு சென்று, உங்கள் அடையாள அட்டை இலக்கத்தை பயன்படுத்தி உங்களுக்குரின் இலக்கம் வழங்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க முடியும்.

ரின் இலக்கம் இல்லாதவர்கள், திணைக்களத்திற்கு நேரடியாக வராமல், முதலில் இணையத்தளத்தில் சரிபார்க்கலாம்.

ஏற்கனவே ரின் இலக்கம் இருந்தால், அதன் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற முடியும்-என்றார். (அ)

# ஞானசார தேரரின் பொதுமன்னிப்பு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு!

கொழும்பு, மே. 31

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு சிறைத்தண்டனை அனுபவித்த பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எடுத்த முடிவு தொடர்பான ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

ஞானசார தேரருக்கு வழங்கப்பட்ட மன்னிப்பைச் செல்லுபடியற்றதாக்கி தீர்ப்பளிக்கக் கோரி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மற்றும் காணாமல்போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட ஆகியோர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுக்கள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது, சட் டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரஜித் பெரேரா இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

நீதியரசர்கள் துரைராஜா, குமுதுனி விக்ரமசிங்க மற்றும் சம்பத் விஜேரத்ன ஆகியோர் அடங்கிய உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஞானசார தேரருக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்குவதற்கான தொடர்புடைய ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றத்துக்குத் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ரஜித் பெரேரா தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத் தரணி பைசர் முஸ்தபா, இந்த வழக்கில் ஆட்சேபனைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களைக் கருத்திற்கொண்டு, மூன்று நீதியரசர்களைக் கொண்ட அமர்வு, மனு மீதான விசாரணையை ஒகஸ்ட் 26 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட கலகொட அத்தே ஞானசார தேரருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் 19 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு ஆறு ஆண்டுகளில் தண்டனையை அனுபவிக்க உத்தரவிட்டதாக மனுதாரர்கள் குறிப்பிட்டனர்.

அதனை உயர் நீதிமன்றமும் தண்டனையை உறுதி செய்ததாக மனுதாரர்கள் கூறுகின்றனர்.

இருப்பினும், ஞானசார தேரருக்கு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய முடிவு செய்தார். மேலும் முன்னாள் ஜனாதிபதி அத்தகைய மன்னிப்பை வழங்குவதில் அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட நடைமுறையைப் பின்பற்றவில்லையென்று மனுதாரர்கள் சாடுகின்றனர்.

இதனால், தங்கள் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்குமாறும் சம்பந்தப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்பை செல்லாததாக்கும் உத்தரவைப் பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள் உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர். (அ)

# 33 லீற்றர் சட்டவிரோத மதுபானம் மீட்பு!

கொழும்பு, மே. 31

நீர்கொழும்பு, கட்டான பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் 45 போத்தல் களிலிருந்து 33.75 லீற்றர் சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்பட்டது.

இதன்போது, 30 வயதுடைய நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் நடத்தப்பட்ட சோதனையின் போது 900 லீற்றர் கோடா (05 பீப்பாய்கள்), 02 செப்புத் தாள்கள், 03 எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் ஒரு எரிவாயு அடுப்பு ஆகியவற்றையும் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

323 கொள்கலன்கள் விடுவிப்பு

# தயாசிறி, உதய கம்மன்பிலவுக்கு எதிராக சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, மே. 31

இலங்கை சுங்கத்திடம் இருந்து 323 கொள்கலன்கள் சோதனையின்றி விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக, பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோரிடம் வாக்குமூலம் பதிவு செய்யுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான முறைப்பாடு ஒன்றை சட்டத்தரணி நளின் சம்பத் குமார குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பதிவு செய்தார்.

கடந்த ஜனவரி மாதம் 18ஆம் திகதி குறித்த கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதன் பின்னர், நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்திருப்பதாகவும், அவற்றில் ஆயுதங்கள் மற்றும் போதைப் பொருட்கள் இருந்ததாகவும் தயாசிறி ஜயசேகர மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கூறி இருப்பதாக சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், அவர்களிடம் நம்பகமான விவரங்கள் இருக்குமாக இருந்தால் அவை தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட வேண்டும் என சட்டத்தரணி குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் கோரியுள்ளார்.

அதன் பின்னர் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# 17 வயது மாணவியை வீட்டுக்கு அழைத்து வந்து கணவர் மூலம் துஷ்பிரயோகம் செய்த ஆசிரியை!

## இருவருக்கும் 45 வருட சிறைத்தண்டனை

கொழும்பு, மே. 31

பதினேழு வயது சிறுமியை கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்ததற்காக குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்ட ஆசிரியை மற்றும் அவரது கணவருக்கும் கொழும்பு உயர் நீதிமன்றம் 45 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தது.

தண்டனைகளுடன் கூடுதலாக, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு கொழும்பு உயர் நீதிமன்றம் ரூ.500,000 அபராதமும் விதித்தது.

நீண்ட விசாரணைக்குப் பிறகு, குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளதாக கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி குறிப்பிட்டார். குற்றம் சாட்டப்பட்ட ஆசிரியை பதினேழு வயது சிறுமியை தொலைதூரப் பகுதியிலிருந்து கொழும்புக்கு அழைத்து வந்து அவரது கணவர் மூலம் பாலியல் வன்கொடுமை செய்ததாகவும், குற்றம் சாட்டப்பட்டவர் அவருக்கு உதவி செய்து உடந்தையாக இருந்ததாகவும் விசாரணையின் போது தெரியவந்தது. ஆதாரங்களை பரிசீலித்த பிறகு, கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க தீர்ப்பளித்தார். (அ)

# சிறைக்குள் போதைப்பொருட்களை கொண்டு செல்ல முயன்ற சிறைச்சாலை அதிகாரி கைது!

கொழும்பு, மே. 31

கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்குள் போதைப்பொருட்களை கொண்டு செல்ல முயன்ற சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொறளை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான சிறைச்சாலை அதிகாரி மகசீன் சிறைச்சாலைக்கு சென்றிருந்தபோது சிறைச்சாலை அதிகாரிகளால் சோதனைக் குட்படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேக நபரான சிறைச்சாலை அதிகாரியிடமிருந்து 16,112 மில்லி கிராம் ஹெரோயின், 12924 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 73855 மில்லி கிராம் புகையிலை உள்ளிட்ட போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் பொறள்ளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (அ)

# சீரற்ற காலநிலையால் மின் தடை

கொழும்பு, மே. 31

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலை காரணமாக பல பகுதிகளில் மின்சாரத் தடைகள் ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் சீரற்ற வானிலை நீடிப்பதால் மின்சாரத் தடை அதிகரித்துள்ளதாக மின்சார சபை மேலும் தெரிவித்துள்ளது.

உங்களது பகுதிகளில் மின்சாரத் தடை ஏற்பட்டால் CEBCare மொபைல் செயலி மூலமாகவோ அல்லது 1987 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கோ அழைப்பை ஏற்படுத்தி தகவல் வழங்குமாறு இலங்கை மின்சார சபை பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் பலத்த காற்று; மரங்கள் முறிந்து விழுந்தன



கொழும்பு, மே. 31

கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் நேற்று முன் தினம் இரவு வீசிய பலத்த காற்று காரணமாக மரங்கள் முறிந்து விழுந்தமையால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதுடன், கடுமையான சேதங்களும் ஏற்பட்டன.

கொள்ளுப்பிட்டியிலிருந்து வெள்ளவத்தை வரையிலான கொழும்பு-காலி பிரதான வீதியிலும், கிராண்ட்பாஸ் பகுதியைச் சுற்றியுள்ள பல இடங்களிலும் மரங்கள் விழுந்தன.

கிரேண்ட்பாஸ் புனித ஜோசப் வீதியில் பாரிய மரம் ஒன்று விழுந்ததால், அருகில் இருந்த 6 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கடுமையான காற்று மற்றும் மழை காரணமாக மரங்கள் விழுந்து மின்கம்பிகளுக்கு சேதம் ஏற்பட்டு கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# இலங்கையில் முதலிடுவதற்கு சீன முதலீட்டாளர்கள் ஆர்வம்!

## ஜனாதிபதியிடம் தெரிவித்தார் அந்நாட்டு வர்த்தக அமைச்சர்



கொழும்பு, மே. 31

**தற்போதைய அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையான வேலைத்திட்டத்தை கருத்திற் கொண்டு இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு சீன முதலீட்டாளர்கள் கவனம் செலுத்தியுள்ளதாக சீன மக்கள் குடியரசின் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் வங் வென் டாவோ தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன மக்கள் குடியரசின் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் வங் வென்டாவோ ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது "இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத் தன்மை மற்றும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் செயல்படுத்தும் வெளிப்படையான வேலைத்திட்டம் காரணமாக சீன முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதாக தெரிவித்த அமைச்சர், 100 இற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களுடனான இந்த விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மேலும் உறுதிப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் சவாலான கால கட்டத்தில் இருநாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில், வர்த்தகம் மற்றும் பொருளாதார இலக்குகளை அடைவதற்கு ஒன்றிணைந்து செயல்படுவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், உலகளாவிய பொருளாதார ஸ்திரமின்மையை எதிர்கொள்ளும்போது இலங்கைக்கு தேவையான ஆதரவை வழங்க சீனா அரப்பணிப்புடன் செயற்படுவதாகவும் சீன வர்த்தக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது சீன அரசாங்கத்தின் ஆதரவுடன் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நிறைவு செய்தல் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை விரைவாக நடைமுறைப் படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஓட்டோவிலிருந்து சிறுவனை தள்ளி கொன்றவருக்கு மரண தண்டனை!

கொழும்பு, மே. 31

ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த 16 வயது சிறுவனை ஓட்டோவிலிருந்து தள்ளிவிட்டு கொலை செய்த சம்பவத்தில், குற்றவாளி என இனங்காணப்பட்ட நபருக்கு பதுளை மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கு, ஊவா மாகாண பதுளை மேல் நீதிமன்ற நீதிபதி பிரசன்ன அல்விஸ் முன்னிலையில் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பதுளை-பசறை வீதியில் 6ஆம் மைல்கல் பிரதேசத்தில் பசறை எல்டொப் தோட்டத்தில் வசித்த பிரான்சிஸ் சுதர்சன் என்ற 16 வயதுச் சிறுவன், கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதியன்று ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருக்கையில் வெளியில் தள்ளப்பட்டுள்ளார்.

இதில் படுகாயமடைந்த அந்த சிறுவன், பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக சாட்சியங்களின் ஊடாக நிரூபணமாகியது. உயிரிந்த சிறுவனுடன் மேலும் மூன்று சிறுவர்கள், மரண வீடொன்றுக்கு சென்று வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர்.

இதன்போது, மதுபோதையில் இருந்த 16 வயது சிறுவனுக்கும் பிரதிவாதியான மரண தண்டனை விதிக்கப்பட்டவருக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது என்பது வழக்கு விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. இச் சந்தர்ப்பத்தில், ஓடிக் கொண்டிருந்த ஓட்டோவிலிருந்து அந்த சிறுவனை, சந்தேக நபர் கீழே தள்ளி இருப்பது விசாரணைகளில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 10 கிலோ கொக்கெய்னுடன் வெளிநாட்டவர் கைதானார்!

கொழும்பு, மே. 31

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கொக்கெய்ன் போதைப்பொருளுடன் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கட்டுநாயக்க விமான நிலைய வருகைப் பிரிவில் நேற்றுக் காலை பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மற்றும் விமான நிலைய சுங்கப் பிரிவு அதிகாரிகள் இணைந்து நடத்திய கூட்டுச் சோதனையின்போது 10 கிலோ 323 கிராம் கொக்கெய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 38 வயதுடைய இத்தாலிய பிரஜை ஆவார்.

இவர் மூன்று பொம்மைகளுக்குள் போதைப்பொருளை சூட்சுமமாக மறைத்து நாட்டுக்குள் கடத்த முயற்சித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய அதிகாரிகளும், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சீரற்ற காலநிலை 1,757 பேர் பாதிப்பு

கொழும்பு, மே. 31

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 485 குடும்பங்களைச் சேர்ந்த 1,757 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்ததையடுத்து, நேற்று முன் தினம் மாலை முதல் நாட்டின் பல பகுதிகளில் பலத்த மழை மற்றும் பலத்த காற்று வீசியதாக தகவல்கள் தெரிவித்தன.

அதன்படி, மழை மற்றும் காற்று நிலைமைகளால் 9 மாவட்டங்கள் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

3 வீடுகள் முழுமையாகவும், 365 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

இருப்பினும், கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள் காற்றினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீதிகளில் வாகனப் போக்குவரத்தும் தடைப்பட்டது. (அ)

# தபால் சேவையாளர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நிறைவு

கொழும்பு, மே. 31

தபால் சேவையாளர்கள் சம்பள உயர்வு மற்றும் பதவி உயர்வு உள்ளிட்ட காரணிகளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட 48 மணி நேர பணி பகிஷ்கரிப்பு நேற்று முன் தினம் வியாழக்கிழமை முடிவுக்கு வந்தது.

தபால் மற்றும் தொலைத் தொடர்பு அதிகாரிகளின் சங்கம் இரண்டு நாட்கள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபடுவதாக அறிவித்து செவ்வாய்க்கிழமை 4.30 மணியளவில் மத்திய தபால் பரிமாற்று நிலைய ஊழியர்கள் பணியிலிருந்து விலகினர். இதற்கமைய புதன்கிழமை நள்ளிரவு முதல் இரண்டு நாட்களுக்கு நாட்டிலுள்ள அனைத்து தபாலகங்கள் மற்றும் உப தபால் அலுவலக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதாக அந்த சங்கம் தெரிவித்திருந்தது.

இதற்கமைய இந்த பணிபகிஷ்கரிப்பு நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரண்டாவது நாளாக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டது.


சம்பள உயர்வு,பதவி உயர்வு மற்றும் ஆட்சேர்ப்பு செயற்பாட்டில் நிலவும் தாமதத்திற்கு தீர்வு காணுதல் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை அடிப்படையாக கொண்டு இந்த பணிபகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் தலைநகர் கொழும்பு உள்ளிட்ட பிரதான தபால் நிலையங்கள் மற்றும் உப தபால் நிலையங்கள் மூடப்பட்டிருந்ததுடன் சேவையை பெற்றுக் கொள்வதற்காக வருகை தந்த பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு முகங் கொடுத்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்படை வைத்த புத்தர் சிலையை பாதுகாக்க

# உகந்தை முருகன் ஆலய புனித பூமியில் பொலிஸார், புலனாய்வாளர்கள் குவிப்பு



திருக்கோவில், மே 31

**உகந்தை முருகன் ஆலய புனித பூமியில் கடற்படையினரே புத்தர் சிலையை வைத்து பராமரித்து வரும் நிலையில் அந்த புத்தர் சிலையை பாதுகாக்க பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். இதனால் இந்துக்கள் மத்தியில் அச்சமும் பதற்றமும் அதிகரித்துள்ளது.**

தொன்மை வரலாறு கொண்ட உகந்தை முருகன் ஆலயம் கடந்த சில நாட்களாக இலங்கையிலும் சர்வதேச அளவிலும் பேசு பொருளாக மாறிய வருகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் லாகுகல பிரதேச செயலாளர் பிரிவு, தென் எல்லையில் அமைந்துள்ள உகந்தை முருகன் ஆலய பிரதேசத்தில் காணப்படும் ஒரு மலையில் திடீரென கடற்படையினரால் புத்தர் சிலை வைக்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த புத்தர் சிலையை கடற்படை முகாமிலிருந்து வந்த இருவர் நேற்று முன்தினம் துப்புரவு செய்தனர். இதன் தொடர்ச்சியாக நேற்றைய தினம் காலை ஆலயத்துக்கு புலனாய்வாளர்கள் வந்து, புத்தர் சிலையை யார் படம் எடுத்தது? யார் ஊடகங்களில் வெளியிட்டது என்று விசாரித்தனர். அத்தோடு, உகந்தை மலையில் வைக்கப்பட்ட புத்தர் சிலையை பாதுகாக்க பொலிஸாரும் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இதனால், அங்கு அச்சமும் பதற்றமும் அதிகரித்துள்ளது.

(எ-01)



# பாடசாலையில் திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டம் ஆரம்பம்

நிந்தவூர், மே 31

அம்பாறை மாவட்ட அரச சார்பற்ற நிறுவனமான நிந்தவூர் பெஸ்ட் ஒவ் யங் சமூக சேவைகள் அமைப்பு "மாணவர் மகிமை" வேலைத் திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளின் திண்மக்கழிவு முகாமைத்துவ செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதற்கமைய நிந்தவூர் கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட நிந்தவூர் மஸ்லம் வித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி திண்மக் கழிவகற்றும் தொட்டிகள் நேற்று வழங்கப்பட்டன.(எ-01)



# மாணவர் படிப்பகம் திறப்பு

மருதமுனை, மே 31

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட மருதமுனை மஸ்ஜிதுன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் மாணவர் படிப்பகம் கடந்த 28 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.(எ-01)

# "சிறுநீரக நோய்கள் வராமல் தடுக்க ஆரோக்கிய சூழல் மிக அவசியம்"

சாய்ந்தமருது, மே 31

பாடசாலைகளில் ஆரோக்கியமான சூழலை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி, மருத்துவர் ஜே. மதன் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக பிராந்தியத்திலுள்ள பாடசாலைகளை கண்காணிக்க சென்ற வேளை மாணவர்கள் பாடசாலையிலுள்ள மலசல கூடத்துக்கு செல்ல ஆர்வம் காட்டாமல் இருப்பதை அறியக்கிடைத்தது.

அசுத்தமான மற்றும் துர்நாற்றம் வீசும் கழிவறைகளே இதற்கு முக்கிய காரணம்.

மலசல கூடங்களை சுத்தப்படுத்த ஆளணிப்பற்றாக்குறை மற்றும் அதற்கான போதிய நிதி உதவியின்மை போன்ற குறைகள் உள்ளன.

இதனால் மாணவர்கள் கழிவறைக்குச் செல்ல தயங்குவதுடன் சிறுநீரை வெளியேற்றாமல் வைத்துக்கொள்ள பழகிக் கொள்கின்றனர்.

இதனால் அவர்களுக்கு, சிறுநீர் தொற்று, சிறுநீரக கற்கள் போன்ற நோய்கள் ஏற்பட வழிவகுப்பதோடு பல நடத்தைப் பிரச்னைகளுக்கும் ஆளாக நேரிடும்.

இந்த பிரச்னைகள் மிகவும் அவசரமாக பரிசீலிக்கப்பட வேண்டியதுடன் ஆரோக்கிய மற்ற நிலைமைகள் காரணமாக சிறுநீரக நோய்கள் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்ய நமது குழந்தைகளுக்கு ஆரோக்கியமான சூழலை நடைமுறைப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படல் காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது- என்றார்.

(எ)

# போதைப்பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு

சாய்ந்தமருது, மே 31

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருதில் போதைப் பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்குட்பட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளை வலுவூட்டும் முகமாக சமுதாய அமைப்பின் நிர்வாகிகளுக்கு அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ. நஜீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேச செயலாளர் எம். ஆசிக் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இதன்போது சமுதாய அடிப்படை அமைப்புகளின் நிர்வாகிகள் 200 பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

மேலும், சாய்ந்தமருதில் இன்று முதல் ஜூன் 17 ஆம் திகதி வரை வீடு வீடாக போதைப் பொருள் மற்றும் புதைத்தல் எதிர்ப்பு பிரசாரத்தை சமுர்த்தி சமுதாய அமைப்புகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட உறுப்பினர்கள் முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டது. அத்தோடு, எதிர்வரும் ஜூன் 04 ஆம் திகதி சாய்ந்தமருதில் போதைப் பொருள் எதிர்ப்பு மகளிர் எழுச்சி மாநாடு நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. (எ)

# காட்டு யானை தாக்கி முதியவர் உயிரிழப்பு!

சம்பூரில், மே 31


திருகோணமலை மாவட்டம் சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள கணேசபுரம் வீதியில் காட்டு யானை தாக்கி முதியவர் ஒருவர் உயிரிழந்ததாக சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

உயிரிழந்தவர் மூதூர் - கட்டைபறிச்சான் பகுதியைச் சேர்ந்த 75 வயதுடைய முதியவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த முதியவர், தனது வயலுக்கு காவலுக்குச் சென்றபோது கணேசபுரம் வீதியில் வைத்து காட்டு யானை தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)



# நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கை பல்கலைக்கழகத்தில் முன்னெடுப்பு

சம்மாந்துறை, மே 31

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேசத்தில் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை நேற்று காலை முதல் வீடுகள், இராணுவ முகாம், பல்கலைக்கழக வளாகம் என்பனவற்றில் மேற்கொள்ளப்பட்டது.


கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன் வழிகாட்டலில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எம். நௌசாத் தலைமையில் கள நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து இனம் காணப்பட்ட இடங்களுக்கு நுளம்பு பெருக்கத்தை கட்டுப்படுத்த புகைவிசுறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் பயன்படுத்திய ஆயுதங்கள் என்ன?

## பதிலளிக்க சீனா முற்றாக மறுப்பு




பீஜிங், மே 31

**சீனாவிடமிருந்து வாங்கப்பட்ட ஆயுதங்களை இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவம் பயன்படுத்தியதாக தகவல் வெளியானது. ஆனால், அந்த ஆயுதங்கள் தொடர்பில் தகவல் வழங்க முடியாது என்று சீனா மறுத்துள்ளது.**

காஷ்மீரில் உள்ள பஹலல்காம் சுற்றுலாத் தலத்தில் கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக மே 7ஆம் திகதி பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் இயங்கி வந்த 9 பயங்கரவாத முகாம்களை "ஒப்ரேஷன் சிந்தூர்" மூலம் இந்திய இராணுவம் துல்லியமாக தாக்கி அழித்தது.

இதன் பின்னர் இந்தியா - பாகிஸ்தான் இடையே போர்ப் பதற்றம் உருவானது. எல்லையில் நான்கு நாட்களுக்கு இரு நாட்டு படைகளுக்கும் இடையே மோதல் நீடித்தது. பின்னர் சண்டை நிறுத்தம் தொடர்பில் புரிந்துணர்வு ஏற்பட்டதை தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் மோதல் முடிவுக்கு வந்தது. இருப்பினும் "ஒப்ரேஷன் சிந்தூர்" தற்காலிகமாகவே நிறுத்தப்பட்டுள்ளதாக இந்திய மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்த நிலையில், சீனாவிடமிருந்து வாங்கப்பட்ட ஆயுதங்களை இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவம் பயன்படுத்தியதாக தகவல் வெளியானது. இது குறித்து சீன ஊடக செய்தியாளர்கள், சீன பாதுகாப்புத்துறை செய்தித் தொடர்பாளர் சாங் சியோகாங்கிடம் கேள்வி எழுப்பினர். ஆனால்,

இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் பயன்படுத்திய ஆயுதங்கள் குறித்த கேள்விக்கு பதிலளிக்க அவர் மறுத்துவிட்டார். அதே சமயம், பாகிஸ்தானிலிருந்து ஏவப்பட்ட, சீனாவின் அதிநவீன ரொக்கெட் பி. எல். -15 ஈ என்ற வெடிக்காத ஏவுகணையை இந்திய இராணுவம் கைப்பற்றியதாக வெளியான தகவல் குறித்தும் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இது குறித்து சாங் சியோகாங் கூறுகையில், "நீங்கள் குறிப்பிட்ட ஏவுகணை ஓர் ஏற்றுமதி உபகரணமாகும். மேலும், அது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாதுகாப்பு கண்காட்சிகளில் பலமுறை காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது"- என்றார். (எ)

# சுவிற்ஸர்லாந்தில் பனிச்சரிவில் புதைந்த கிராமம்; 5 பேர் மாயம்

பேர்ன், மே 31

சுவிற்ஸர்லாந்தில் ஏற்பட்ட திடீர் பனிச்சரிவில் கிராமம் ஒன்று புதைந்தது.

கிராமத்திலிருந்த சுமார் 300இற்கும் மேற்பட்ட பொது மக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

சுவிற்ஸர்லாந்து வாலேஸ் அருகே பனிமலை சிகரங்கள் பல அமைந்துள்ளன. இந்த சிகரத்தின் உச்சியில் ராட்சத பனிப்பாறை ஒன்று வெகு நாட்களாக தொடர்ந்து உருகி வந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் அந்த ராட்சத பனிப்பாறை பயங்கர சத்தத்துடன் மலை வழியாக வேகமாக சரிந்தது.

தொடர்ந்து அந்த பனிப்பாறை முழுவதுமாக சரிந்து அடிவாரத்துக்கு வந்தது. இதன் காரணமாக மலை அடிவாரத்தில் இருந்த ஆல்பைன் என்ற கிராமம் பனிப்பாறைகள் மற்றும் பனி குவியல்களால் முழுவதுமாக மூடியது.

முன்னதாக அந்தக் கிராமத்திலிருந்த சுமார் 300இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இதனால் பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இருப்பினும் பனிச்சரிவு காரணமாக அந்தக் கிராமம் முழுவதும் பனியால் மூடியது.

மேலும் அங்கிருந்த சுமார் 100 வீடுகள் சேதமடைந்தன. மீட்புப்பணியில் ஈடுபட்ட இராணுவ வாகனம் ஒன்று திடீரென மாயமானது. அதிலிருந்த இராணுவத்தினர் உட்பட ஐவர் மாயமாகினர். (எ)

# ட்ரம்ப்பின் வரி விதிப்பு; வர்த்தக நீதிமன்ற தடை நிறுத்திவைப்பு

வாஷிங்டன், மே 31

உலக நாடுகள் இடையேயான வர்த்தகத்துக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வரி உயர்வை அறிவித்தார். அவரின் இந்த வரி விதிப்பு நடவடிக்கைக்கு அமெரிக்காவின் சர்வதேச வர்த்தக நீதிமன்றம் தடை விதித்தது. அதை எதிர்த்து ட்ரம்ப் நிர்வாகம் பெடரல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தை நாடியது. இந்த நிலையில், வர்த்தக நீதிமன்றத்தின் தடை உத்தரவை தற்காலிகமாக நிறுத்தி வைத்து பெடரல் மேல் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)

# பிரம்மோஸ் ஏவுகணைகள் மூலம் பாக். விமான தளம்மீது தாக்குதல்

## பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்

லாசின், மே 31

இந்திய இராணுவம் பிரம்மோஸ் ஏவுகணைகள் மூலம் பாகிஸ்தான் விமானத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது என்று அந்த நாட்டின் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அஜர்பைஜானின் லாசின் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 10ஆம் திகதி அதிகாலையில் தொழுகையை முடித்த பிறகு இந்தியா மீது தாக்குதல் நடத்த பாகிஸ்தான் இராணுவம் திட்டமிட்டிருந்தது. அதாவது அதிகாலை 04.30 மணிக்கு பிறகு தாக்குதலை தொடங்க திட்டமிட்டிருந்தோம். ஆனால் அதற்கு முன்பாக இந்திய இராணுவம் பிரம்மோஸ் ஏவுகணைகள் மூலம் பாகிஸ்தான் விமானப் படைத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. இந்திய இராணுவ தாக்குதல் குறித்து எங்களது இராணுவத் தளபதி ஆசீம் முனீர் அதிகாலையில் என்னிடம் கூறினார்.

நாங்கள் தாக்குதல் நடத்துவதற்கு முன்பாக இந்திய இராணுவம் தாக்குதலை தொடங்கி விட்டது - என்றார். (எ)

# இராணுவ விமானம் விபத்து இராணுவத்தினர் நால்வர் பலி

## தென்கொரியாவில் கோரச் சம்பவம்

சியோல், மே 31

தென்கொரியாவில் இராணுவ விமானம் தரையில் விழுந்து விபத்துக்குள்ளானதில் இராணுவத்தினர் நால்வர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர்.

தென்கொரியாவில் நேற்று அதிகாலை கடல் பரப்பின்மேல் பறந்தபடி கடற்படைக்குச் சொந்தமான இராணுவ விமானம் ஒன்று ரோந்து மேற்கொண்டது. அந்த விமானத்தில் இராணுவ உயர் அதிகாரி உட்பட நால்வர் பயணித்தனர்.

நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது அந்த விமானத்தில் திடீரென கோளாறு ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து கண்காணிப்பு அறையுடனான தொடர்பை இழந்தது. வானிலிருந்து வட்டமடித்தபடி அங்குள்ள கடற்கரை கிராமத்தின் அருகே தரையில் மோதி விழுந்தது.

மோதிய வேகத்தில் அந்த விமானம் தீப்பிடித்து முழுவதுமாக எரிந்தது. இந்த கொடூர விபத்தில் விமானத்திலிருந்த நான்கு இராணுவத்தினரும் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். (எ)

# ஞானசேகரன் குற்றவாளி!

சென்னை, மே 31

அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்புணர்வு செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி என தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 23ஆம் திகதி இரவு, பல்கலைக்கழகத்தில் படித்து வந்த மாணவி, சக மாணவருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ஞானசேகரன் இருவரையும் மிரட்டி மாணவனை அங்கிருந்து விரட்டி விட்டு மாணவியை தனியாக அழைத்து சென்று பாலியல் வன்புணர்வு செய்தார்.

பல்கலைக்கழக வளாகத்திலேயே மாணவி பாலியல் வன்புணர்வு செய்யப்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்புணர்வு செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி என தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 11 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகியுள்ளதாக நீதிபதி தெரிவித்தார். மேலும் ஞானசேகரனுக்கான தண்டனை விவரங்கள் ஜூன் 2ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் தண்டனை விவரம் வெளியாகும் வரை அவரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி ராஜலட்சுமி உத்தரவிட்டார். (எ)

# ஸ்பெய்னில் அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்து

மட்ரிட், மே 31

ஸ்பெய்னில் அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் நால்வர் பலியாகினர்.

பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரத்தை தேடி ஆபிரிக்கா, எகிப்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் ஆபத்தான பயணம் மேற்கொள்கின்றனர். இந்த பயணத்தின் போது விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்பு சம்பவங்களும் நிகழ்கின்றன.

இந்த நிலையில், ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த 100இற்கும் மேற்பட்ட அகதிகள் ஐரோப்பிய நாடான ஸ்பெய்னுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயற்சித்துள்ளனர். இதற்காக படகு மூலம் மத்திய தரைக்கடல் வழியாக அகதிகள் பயணித்துள்ளனர்.

ஸ்பெய்னின் கனெறி தீவு அருகே வந்தபோது எதிர்பாராத விதமாக படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படகில் பயணித்த அனைவரும் கடலில் விழுந்து தத்தளித்தனர்.

விபத்து குறித்து அறிந்த ஸ்பெயின் கடலோர காவல் படையினர் விரைந்து சென்று கடலில் தத்தளித்த 100இற்கும் மேற்பட்டோரை மீட்டுள்ளனர். இந்த சம்பவத்தில் கடலில் மூழ்கி 4 பெண்கள் உயிரிழந்தனர். (எ)

# இந்தியர்களுக்கு வீசா தேவையில்லை

மணிலா, மே 31

இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு பிலிப்பைன்ஸ் அரசு 14 நாட்கள் வரை விசா இல்லாத நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதன்படி, பிலிப்பைன்ஸின் அழகிய கடற்கரைகளையும் சுற்றுலாத் தலங்களையும் காண விரும்பும் இந்தியர்கள், விசா இல்லாமல் 14 நாட்கள் பிலிப்பைன்ஸ் நாட்டில் தங்கியிருந்து சுற்றிப் பார்க்கலாம். சுற்றுலாவை ஊக்குவிக்கவும் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்தவும் இக்கொள்கையை பிலிப்பைன்ஸ் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இறுதிப்போட்டியில் ஆர். சி. பி. பஞ்சாப் அணி படுதோல்வி



முல்லான்பூர், மே 31

முதல் அரையிறுதி போட்டியில் அசத்தல் வெற்றி பெற்ற ஆர். சி. பி. அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் இந்தியாவின் பஞ்சாப் மாநிலம் முல்லான்பூரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் - றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் மோதின.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக பிரியன்ஷ் ஆர்யா - பிரப்சிம்ரன்சிங் களமிறங்கினர். நடப்பு சீசனில் அதிரடியான தொடக்கத்தை கொடுத்த இந்த ஜோடி இம்முறை நீண்ட நேரம் நிலைக்கவில்லை. யாஷ் தயாள் பந்துவீச்சில் பிரியன்ஷ் ஆர்யா 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்திலேயே மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான பிரப்சிம்ரன்சிங் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த பஞ்சாப் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் ஸ்ரேயஸ் ஐயர் 2 ஓட்டங்களில் வெளியேறினார். நடப்பு சீசனில் சீரான ஆட்டத்தை வெளிப்படுத்திய பஞ்சாப் அணி இந்த முறை பெங்களூரு பந்துவீச்சில் அதிரடி காட்ட முடியாமல் தடுமாறியது. ஆர்.சி.பி. அணியின் பந்துவீச்சு கூட்டணி இந்த ஆட்டத்தில் சிறப்பாக செயல்பட்டது.


அடுத்து வந்த ஜோஷ் இங்கிலிஸ் 4 ஓட்டங்களிலும் நேஹல் வதேரா 8, ஷஷாங்க் சிங் 3 ஓட்டங்களிலும் முஷீர் கான் ஓட்டமின்றியும் வந்த வேகத்திலேயே பெவிலியன் திரும்பினர். சிறிது நேரம் நிலைத்து விளையாடி அணிக்கு நம்பிக்கை அளித்த மார்கஸ் ஸ்ரொய்னிஸ் 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இறுதிக் கட்டத்தில் அஸ்மத்துல்லா ஓமர்சாய் ஓரளவு சமாளித்து 18 ஓட்டங்கள் எடுத்து, பஞ்சாப் அணி 100 ஓட்டங்களை எட்ட உதவினார்.

14.1 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த பஞ்சாப் அணி 101 ஓட்டங்களுக்கு சுருண்டது. அபாரமாக பந்து வீசிய பெங்களூரு தரப்பில் சுயாஷ் சர்மா, ஹேசில்வுட் தலா 3 விக்கெட்களும் யாஷ் தயாள் 2 விக்கெட்களும் புவனேஸ்வர் குமார், ஷெப்பர்ட் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 102 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி பெங்களூரு களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக பிலிப் சால்ட் மற்றும் விராட் கோலி களமிறங்கினர். இதில் விராட் கோலி 12 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த மயங்க் அகர்வால் 19 ஓட்டங்களில் வெளியேறினார்.

மறுபுறம் நிலைத்து நின்று அதிரடி காட்டிய பிலிப் சால்ட் 23 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். இறுதியில் பெங்களூரு அணி 10 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 106 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

பிலிப் சால்ட் (56 ஓட்டங்கள்) மற்றும் ரஜத் படிதார் (15 ஓட்டங்கள்) இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் ஐ.பி.எல். - 2025 இறுதிப்போட்டிக்கு முதல் அணியாக பெங்களூரு முன்னேறியது. இதற்கு முன்பு கடந்த 2016ஆம் ஆண்டு பெங்களூரு அணி ஐ.பி. எல். இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. (எ)




# நோர்வே செஸ் சம்பியன் குகேஷ் 2ஆவது வெற்றி

ஸ்டாவஞ்சர், மே 31


நோர்வே செஸ் உலக சம்பியன் போட்டி தொடரில் இந்திய வீரர் குகேஷ் 2ஆவது வெற்றி பெற்றுள்ளார்.

நோர்வே கிளாசிக்கல் சர்வதேச செஸ் போட்டி ஸ்டாவஞ்சர் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் உலக சம்பியனான இந்தியாவின் குகேஷ், அர்ஜுன் எரிகைசி, 5 முறை உலக சம்பியனான மாக்னஸ் கார்ல்சன் (நோர்வே) உட்பட 6 வீரர்கள் பங்கேற்றுள்ளனர். இதில் ஒவ்வொரு வீரரும் மற்ற வீரர்களுடன் தலா 2 முறை மோத வேண்டும்.

இதில் தனது முதல் 2 சுற்று ஆட்டங்களில் தோல்வியடைந்த குகேஷ் 3ஆவது சுற்றில் அமெரிக்காவின் ஹிகாரு நகமுராவை தோற்கடித்து வெற்றிப்பாதைக்குத் திரும்பினார்.

இதனையடுத்து குகேஷ் 4ஆவது சுற்றில் அமெரிக்க கிராண்ட்மாஸ்டரான பாபியானோ கருனா உடன் மோதினார். இதில் வெள்ளை நிற காய்களுடன் குகேஷ் விளையாடினார். இந்த ஆட்டம் வழக்கமான நேரத்தில் சமநிலையானது. இதன் பிறகு வெற்றியாளரை தீர்மானிக்க அர்மகெதோன் டைபிரேக்கர் முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் குகேஷ் வெற்றி பெற்று அசத்தினார். இதன் மூலம் குகேஷ் தொடர்ச்சியாக 2ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளார்.

4ஆவது சுற்று முடிவில் கார்ல்சன் 8 புள்ளிகளுடன் முதலிடத்திலும் பாபியானோ கருனா 7 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும் ஹிகாரு நகமுரா 5. 5 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் குகேஷ் மற்றும் அர்ஜுன் எரிகைசி தலா 4. 5 புள்ளிகளுடன் அடுத்த 2 இடங்களிலும் உள்ளனர். (எ)




## பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ்: ஜோகோவிச் அபார வெற்றி

பாரிஸ், மே 31

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் போட்டி தொடரில் ஜோகோவிச் அபார வெற்றி பெற்றார்.

"கிராண்ட்ஸ்லாம்" என்ற உயரிய அந்தஸ்து கொண்ட பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், பிரெஞ்ச் வீரரான கோரன்டின் மவுடெட் உடன் மோதினார்.

இதில் ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச் 6-3, 6-2 மற்றும் 7-6 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று 3ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார். (எ)

# 238 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அசத்தல் வெற்றி

பர்மிங்காம், மே 31

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 238 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் ரி- 20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலில் ஒருநாள் தொடர் நடைபெற்று வருகிறது.

இதன்படி இங்கிலாந்து - மேற்கு இந்திய தீவுகள் இடையிலான முதல் ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடியது. தொடக்க ஆட்டக்காரரான ஜேமி சுமித் 24 பந்துகளில் 37 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து வந்த வீரர்களும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்த இங்கிலாந்து இமாலய இலக்கை நோக்கி பயணித்தது.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்த இங்கிலாந்து 400 ஓட்டங்கள் குவித்து அசத்தியது. இங்கிலாந்து தரப்பில் ஜேக்கப் பெத்தேல் (82 ஓட்டங்கள்), பென் டக்கெட் (60 ஓட்டங்கள்), ஹாரி புரூக் (58 ஓட்டங்கள்) மற்றும் ஜோ ரூட் (57 ஓட்டங்கள்) ஆகிய 4 வீரர்கள் அரைச்சதம் அடித்து அசத்தினர். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் ஜெய்டன் சீல்ஸ் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.




பின்னர் 401 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி இங்கிலாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விரைவாக விக்கெட்களை இழந்தது. வெறும் 26. 2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த அந்த அணி 162 ஓட்டங்கள் எடுத்தது. இதனால், 238 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் அணி தரப்பில் ஜெய்டன் சீல்ஸ் 29 ஓட்டங்கள் அடித்தார். இங்கிலாந்து சார்பில் சகிப் மஃமூத் மற்றும் ஜேமி ஓவர்டான் தலா 3 விக்கெட்களும் ஆதில் ரஷித் 2 விக்கெட்களும் வீழ்த்தினர். (எ)

# ஐ.பி.எல். கிரிக்கெட் வரலாற்றில் ஆர். சி. பி. மகத்தான சாதனை

முல்லான்பூர், மே 31

ஐ. பி. எல். கிரிக்கெட் வரலாற்றில் பெங்களூரு அணி மகத்தான சாதனை படைத்துள்ளது.

18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் இறுதிப் போட்டிக்கான முதலாவது தகுதி சுற்றில் புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்த பஞ்சாப் கிங்ஸ், 2ஆவது இடம் பெற்ற றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை எதிர்கொண்டது.

இதில், 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார ஆர். சி. பி. அபார வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

பெங்களூரு அணி இந்த ஆட்டத்தில் 60 பந்துகள் மீதம் வைத்து வெற்றி பெற்றது. இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் பிளேஒவ் சுற்றில் அதிக பந்துகள் மீதம் வைத்து வென்ற அணி என்ற மகத்தான சாதனையை படைத்துள்ளது.

இதற்கு முன்னர் கடந்த சீசனின் இறுதிப்போட்டியில் ஹைதராபாத் அணிக்கு எதிராக கொல்கத்தா 57 பந்துகள் மீதம் வைத்து வெற்றி பெற்றதே சாதனையாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள பெங்களூரு புதிய சாதனை படைத்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருமி...

குறித்த குழந்தை கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி பிறந்தது. இந்த நிலையில், கடந்த மே 07ஆம் திகதி மருத்துவமனையில் குழந்தை சேர்க்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, வயிற்றில் ஏற்பட்ட கட்டிக்காக 3 தடவைகள் குழந்தை சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டது. இந்த நிலையில், குழந்தை நேற்று முன்தினம் குழந்தை உயிரிழந்தது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். கிருமித்தொற்று ஏற்பட்டதால் மரணம் சம்பவித்ததாக உடற்கூராய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சீரற்ற...

மேலும், அனர்த்தங்களால் கடந்த 14ஆம் திகதி முதல் நேற்று வரை மூவர் உயிரிழந்தனர். 24 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களுக்கு 10 இலட்சம் ரூபாயை இழப்பீடாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேலும், 7 வீடுகள் முழுமையாகவும் 2 ஆயிரத்து 53 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. முழுமையாக சேதமடைந்த வீடுகளுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பகுதியளவில் சேதமடைந்த வீடுகளை மதிப்பிட்ட பின்னர் இழப்பீடுகள் வழங்கப்படும் - என்றும் அவர் கூறினார்.

**கனமழை தொடரும்**

இதனிடையே, அடுத்த 36 மணி நேரத்தில் தென்மேற்கு பருவப் பெயர்ச்சியால் மேற்கு, சப்ரகமுவ, வடமேற்கு மாகாணங்களிலும், காலி, மாத்தறை, நுவரெலியா, கண்டி மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. அத்துடன், நாளை மறுதினம் திங்கட்கிழமையின் பின்னரே காலநிலையில் மாற்றம் ஏற்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மேற்கு, சப்ரகமுவ, மத்திய, தெற்கு, வடக்கு, வடமத்திய , வடமேற்கு மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணிக்கு 50 - 60 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். கடலோர பகுதிகளில் மணிக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்க்க வேண்டும்.

**போக்குவரத்து தடை**

இதனிடையே, கொழும்பில் நேற்று முன்தினமும் நேற்றும் பெய்த கனமழையுடன் கூடிய காற்றால் பல இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன. இதனால், வீதி மற்றும் ரயில் போக்குவரத்துகள் பல இடங்களில் பாதிக்கப்பட்டன. அத்துடன், மின் தடைகளும் ஏற்பட்டன.

**50 ஆயிரம் மின் தடை!**

சீரற்ற காலநிலையால் நாட்டில் 50 ஆயிரம் மின் தடைகள் பதிவாகி யுள்ளன என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுசீரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் மின் தடை ஏற்பட்டால் 1987 என்ற இலக்கத்துக்கு தகவல் வழங்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

**3 மீனவர்கள் மீட்பு**

இதனிடையே, கொழும்பு - பம்பலப்பிட்டி கடல் பரப்பில் கடற் கொந்தளிப்பில் சிக்கிய 3 மீனவர்கள் விமான படையினரால் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**மீனவருக்கு எச்சரிக்கை**

மேலும், சிலாபம் தொடக்கம் புத்தளம் மற்றும் மன்னார் ஊடாக காங்கேசன் துறை வரையும், காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்து வில் வரையான கடல் பகுதிகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத் துக்கு 60 - 70 கிலோ மீற்றராகக் காணப்படும். எனவே, குறித்த கடற்பகுதிகளில் மறு அறிவித்தல் வரை மீன்பிடி நடவடிக்கைகளுக்கு செல்ல வேண்டாம் என மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்.மாவட்ட...

பன்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்டத் தின் பன்முகப் ஊடாக மாவட்டத்துக்கு ஒதுக்கப்படும் நிதி, அதனூடாக செயல்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன.

துறை ரீதியான முன்னேற்றம் குறித்த மீளாய்வில் சேவைத்துறைகள் சார்ந்த முன்னேற்றங்கள், அவற்றில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கான தீர்வுகள் குறித்தும் பேசப்பட்டன.

மேலும், விவசாயம், மருத்துவம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைசார் விடயங்கள் விவாதிக்கப்பட்டன. குறிப்பாக, அம்புலன்ஸ் சாரதிகள் பற்றாக்குறை தொடர்பான பிரச்னைகளை தீர்ப்பதற்கான வழிகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டன.

இந்த ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் பதில் மாவட்ட செயலாளர் ம. பிரதீபன், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், கே.இளங்குமரன், சிறீபவானந்தராஜா, ஜெ.றஜீவன், இ. அர்ச்சுனா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், வடக்கு மாகாண சபை அவை தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், மாவட்ட செய லக உயர் அதிகாரிகள், பிரதேச செயலக மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள், பொலிஸ் உயரதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், கிராம சேவகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## நாங்கள்...

மேற்கண்டவாறு கூறினர்.

மேலும், எமக்கான நீதியைக் கோரி தொடர்ச்சியாக நாம் போராடி வருகிறோம். இந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களை தேடிய 300இற்கும் மேற்பட்ட உறவுகளை நாம் இழந்துள்ளோம். தங்களின் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமலேயே அவர்கள் இறந்தனர்.

மீதமுள்ள - சாட்சிகளான நாங்களும் இறப்பதற்கு முன்பாக எமக்கான நீதியை சர்வதேசம் வழங்கவேண்டும். கொலைக் குற்றங்களை செய்த அரச படைகளை விசாரிக்க இயலாத அரசாங்கம் தமிழ் இனத்தை ஏமாற்றி வருகிறது. சர்வதேச பொறிமுறை ஒன்றின் மூலம் எமக்கான நீதி கிடைக்கப்பெற வேண்டும் - என்றனர். (ஐ)

## பிள்ளையானின்...

முதலாவது வாவிக்கரை வீதி யில் அமைந்துள்ள தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைமை பணிமனையே இவ்வாறு சோதனையிடப்படுகிறது. பணிமனை வளாகத்தின் நிலப்பகுதியும் துளையிடப்பட்டு சோதனை முன்னெடுக்கப்படுகிறது என்றும் தெரிய வருகிறது.

கொழும்பிலிருந்து வந்த சி. ஐ. டியினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து இந்த சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மேலும், கட்சிப் பணிமனைக்குள் இருந்தவர்களின் தொடர்புகள் அனைத்தையும் துண்டித்ததுடன், அவர்களை அங்கேயே தடுத்தும் வைத்துள்ளனர் என்றும் தெரிய வருகிறது. இதேநேரம், கட்சி பணிமனைக்கு செல்வதற்கு வேறு நபர்களுக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு. ரவீந்திரநாத் கடந்த 2006 டிசெம்பர் 15ஆம் திகதி கொழும்பிலிருந்து மட்டக்களப்பு சென்றபோது கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக பிள்ளையான் என்று அறியப்பட்ட சி. சந்திரகாந்தன் கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி குற்றப் புலனாய்வு பிரிவினரால் கடந்த பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரச நிறுவனங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து முறைப்பாடுகள்!

## அமைச்சர் சந்திரசேகர் சுட்டிகாட்டு

யாழ்ப்பாணம், மே 31

அரச நிறுவனங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து தொடர்ச்சியாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று நடந்த யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றிய ஆளுநர், நடப்பு ஆண்டின் மே மாதமும் நிறைவுறுகின்றது. மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை விரைவாகவும் - வினைத்திறனாகவும் செலவு செய்ய வேண்டும். ஜனாதிபதி, மாகாண ஆளுநர்களை அண்மையில் சந்தித்திருந்தார். இதன்போது மாகாணங்களுக்கு கடந்த காலத்தைவிட 3 மடங்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளமையைச் சுட்டிக்காட்டியதுடன் ஒரு சதம் நிதியையும் திருப்பி அனுப்பாமல் சரியாக செலவு செய்ய வேண்டும் என்றும் கோரினார். எனவே, இதனைச் செயல்படுத்த உங்கள் அனைவரதும் ஒத்துழைப்பைக் கோருகிறேன், என்றார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர், ஆளுநர் குறிப்பிட்டதைப் போன்று ஒதுக்கப்பட்ட நிதியை விரைவாகவும் வினைத்திறனாகவும் செலவு செய்ய அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். எதிர்வரும் ஆண்டுகளில் அதிகளவு நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு ஜனாதிபதி தயாராக இருக்கிறார். மேலும், சில அரச நிறுவனங்கள் தொடர்பில் மக்களிடமிருந்து தொடர்ச்சியாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன - என்றார். (ஐ)

# கால அவகாசம் நிறைவு

கொழும்பு, மே 31

உளசூராட்சி மன்றங்களின் உறுப்பினர் பெயர் பட்டியலை அறிவிப்பதற்காக வழங்கப்பட்ட கால அவகாசம் நள்ளிரவுடன் நிறைவடைந்தது.

இந்த நிலையில், “வழங்கப்பட்ட கால அவகாசம் மேலும் நீடிக்கப்படமாட்டாது”, என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.ஏல். ரத்நாயக்க நேற்று தெரிவித்தார்.

தேர்தல் முடிவடைந்து 21 நாட்களில் குறித்த பெயர் பட்டியல் அறிவிக்கப்பட வேண்டும். எனினும், தேர்தலில் போட்டியிட்ட அரசியல் கட்சிகள், சுயேச்சை குழுக்களில் பெரும்பாலானவை குறித்த பெயர் பட்டியலை சமர்ப்பிக்கவில்லை என்றும் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (ஐ)

## சிக்குன்குனியா...

சந்திப்பிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மேலும், நாட்டில் பல பகுதிகளிலும் டெங்கு மற்றும் சிக்கன்குனியா பரவல் தீவிரமடைந்துள்ளது. இதுவரை நாடளாவிய ரீதியில் 23 ஆயிரத்து 300இற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 45 சதவீதமான நோயாளர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

அத்துடன், மட்டக்களப்பு, காலி, இரத்தினபுரி, குருநாகல் மாவட்டங்களிலும் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். டெங்கு மற்றும் சிக்கன்குனியா என்பன வைரஸால் பரவுகின்ற நோயாகும். இவை இரண்டும் நோயும் நுளம்புகளால் பரவுகிறது.இதுவரை 500இற்கும் மேற்பட்ட சிக்குன்குனியா நோயாளர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனினும், வெளிநோயாளர் பிரிவுகளை சிகிச்சையினை பெற்று செல்லும் நோயாளர்கள் தொடர்பில் எவ்வித தரவுகளும் இல்லை.

தென்மேற்கு பருவ மழையைத் தொடர்ந்து ஜூன், ஜூலை மாதங்களில் இந்த நிலைமை மேலும் மோசமடைய வாய்ப்புள்ளது என்றும் மருத்துவர் எச்சரித்தார்.

இதேவேளை, இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் சுரந்த பெரேரா கருத்து வெளியிடுகையில், கடுமையான மூட்டு வருத்தத்தை ஏற்படுத்தக்கூடிய சிக்குன்குன்னியாவிடமிருந்து பச்சிளம் குழந்தைகளையும் வயோதிபர்களையும் பாதுகாப்பது அவசியம். பிரசவ காலம் நெருங்கியுள்ள தாய்மார்கள் அதிக அவதானத்துடன் செயல்பட வேண்டும். குழந்தை பிறந்து ஒரு வாரக் காலப்பகுதியில் சிக்குன்குனியா ஏற்படலாம். இதனால் குழந்தையின் இதயம் மற்றும் மூளை உள்ளிட்ட உறுப்புகள் பாதிக்கப்படலாம். எனவே, இந்த டெங்கு, சிக்குன்குனியா நோய் பரவல் குறித்து அவதானமாக செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

## அரசு...

தாக்குதல் வழக்கை மூடிமறைப்பதற்கு எதிராக நாங்கள் உண்மையையும் நீதியையும் கோருகிறோம். உண்மையான குற்றவாளிகள் மற்றும் சம்பந்தப்பட்டவர்கள் வெளிப்படும்வரை பாதிக்கப்பட்டவர்களும் நீதிக்காக காத்திருக்கிறார்கள்.

நாடு பொருளாதார ரீதியாகவும் பல வழிகளிலும் சரியான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. இன்று மக்களிடையே ஒரு குறிப்பிட்ட நம்பிக்கை உணர்வு இருக்கிறது.

நாட்டில் ஒரு பொறுப்பான அரசியல் வர்க்கமும் மக்கள் நம்பும் ஒரு ஜனாதிபதியும் இருக்கின்றனர். கத்தோலிக்க மக்களில் பெரும்பாலானோர் ஜனாதிபதியை ஆதரிக்கின்றனர். திருச்சபை அரசாங்கத்துடன் நல்ல உறவைப் பேணுகிறது. ஒத்துழைப்புக்கான நல்ல வாய்ப்புகளும் இருக்கின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## புதிய...

காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறுகையில்,

கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசியத்துக்கே மக்கள் ஆணை வழங்கினார்கள். தமிழ்த் தேசிய பேரவையான நாம், இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகிய மூன்று கட்சிகளும் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தியே மக்களிடம் ஆணை கேட்டனர். இந்த ஆணையை மீறும் வகையில் எவரும் செயல்பட முடியாது.

நாம் கொள்கை அடிப்படையிலான இணக்கப்பாட்டை வலியுறுத்தினோம். அதில் எந்த இணக்கமும் எட்டப்படவில்லை. அந்த இணக்கப்பாடின்றி வெறுமனே சபைகளை கைப்பற்றுவதற்காக மட்டும் நாம் இணைய முடியாது. எனவே, ஒரு தலைப்பட்சமாக நாம் ஒரு முடிவு எடுத்துள்ளோம் - முன்னர் கூறியது போன்று முதலிடத்தில் இருக்கும் கட்சி தவிசாளர் பதவியை பெறவும் இரண்டாவது இடம் பெற்ற கட்சி உபதவிசாளர் பதவியை பெறவும் நாம் ஆதரவளிப்போம்.", என்றார்.

இதேசமயம், இந்த சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன், “ஏற்கனவே இரு கட்சிகளாலும் வெளியிடப்பட்ட நிலைப்பாடுகளுக்கு அமைய ஒவ்வொரு சபைகளிலும் கூடுதல் ஆசனங்களை பெற்ற கட்சி ஆட்சி அமைப்பதற்கும் மற்றைய கட்சி அதற்கு ஆதரவு அளிப்பதற்கும் இதன்போது இணக்கப்பாடு எட்டப்பட்டது”, என்று கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இந்தியாவுக்கு அகதியாகச் சென்று நாடு திரும்பியவர் பலாலியில் கைது!

## ஜூன் 5 வரை விளக்கமறியல் உத்தரவு

யாழ்ப்பாணம், மே. 31

**இந்திய அகதி முகாமில் பல தசாப்தங்களாக தஞ்சமடைந்திருந்த 71 வயது முதியவரை குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்றுமுன்தினம் பலாலியில் வைத்து கைது செய்துள்ளனர்.**

இவ்வாறு கைது செய்யப்பட்ட முதியவர் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு ஜூன் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

"முதியவரிடம் நாடு திரும்புவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்கள் இருந்தும், சர்வதேச சட்டப்படி அவர் ஒரு அகதி என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னரும் அவரை பிணையில் விடுவிக்க எதிர்ப்புத் தெரிவித்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவமானது நாடு திரும்புவதற்கு தயாராக இருக்கும் 10 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள், நாட்டிற்கு பயந்து வராமல் இருப்பதற்காக செய்யப்பட்ட ஏற்பாடுகளா?" என இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார். (அ)

## ஐ.நா.வின் பங்களிப்புடன் விரைவில் வடக்கு-கிழக்கில் புதிய திட்டங்கள்!



யாழ்ப்பாணம், மே. 31

ஐ.நா.வின் பங்களிப்புடன், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி மற்றும் நம்பிக்கை கட்டியமைக்கும் செயல்திட்டமான லன்ரேன் திட்டத்தின் அறிமுக நிகழ்வு வடக்கு மாகாண நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் ஆலோசகர் பட்டிரிக், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினர், ஐ.ஓ.எம். நிறுவனத்தினர், யு.என். ஹபிட்டாட் நிறுவனத்தினர், வடக்கு மாகாண காணி ஆணையாளர், வடக்கு மாகாண பிரதி நில அளவையாளர் நாயகம், முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் மாவட்ட செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்து வெளியிட்ட ஆளுநர், ஐ.நா.வின் அமைதிக்கான நிதியத்தின் மூலம் 3 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் 2 ஆண்டுகளில், வட மற்றும் கிழக்குப் பகுதிகளில் காணியுடன் தொடர்புடைய முக்கிய சவால்களைத் தீர்ப்பதற்கும், அதற்குப் போதுமான முக்கியத்துவமுள்ள வகையில், அரசாங்கம் மற்றும் பொதுமக்கள் இடையிலான நம்பிக்கையை வளர்த்தெடுப்பதற்குமான திட்டமாக இது அமைகின்றது-என்றார். (அ)

## ஊடகங்களை அடக்குமுறைக்கு உட்படுத்த அரசாங்கம் முயற்சி!

### உதய கம்மன்பில குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 31

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஊடகங்களை அடக் குமுறைக்கு உட்படுத்த முயற்சிப்பதாக குற்றம் சுமத் தப்பட்டுள்ளது. எதிர்க்கட்சிளினால் இந்த குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தை அசௌகரியப்படுத்தும், அரசாங்கத்தின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய செய்திகளை வெளியிடும் தனியார் ஊடகங்களை கட்டுப்படுத்த முயற்சிக்கப்படுவதாக நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் கிடைத்துள்ளது என முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இந்த தகவல் உண்மையில்லை என்றால் அரசாங்கம் அதனை உறுதி செய்ய முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் இந்த விடயம் உண்மையானால் அதுவே இந்த அரசாங்கத்தின் இறுதிக் காலம் என்பதனை ஜனாதிபதி நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சார்பின்றி முதுகெலும்புடன் தகவல்களை வழங்கும் ஊடகங்கள் சொற்ப அளவிலானவை எனவும் அவற்றை ஒடுக்குமுறைக்கு உட்படுத்த அனுமதிக்க முடியாது எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டார். (அ)

## கொழும்பு உட்பட 100 சபைகளில் எதிர்க்கட்சிகளின் ஆட்சி அமையும்

### நளின் பண்டார நம்பிக்கை



கொழும்பு, மே. 31

கொழும்பு மாநகரம் உட்பட 100 சபைகளில் எதிர்க்கட் சிகள் ஆட்சியமைக் கும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கொழும்பின் அதிகாரம் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சிகள் வசமாகும் என்பதை ஸ்திரமாகக் கூறுகின்றேன்.

நான் குருநாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் கொழும்பில் ஆட்சியமைப்பதற்கான பலத்தை வழங்குவேன்.

காரணம் கொழும்பு மாநகர சபை என்பது நாட்டினதும் கட்சியினதும் இதயம் போன்றதாகும். அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாம் அதிகாரத்தைக் கைப்பற்றிய இடமாகும்.

அதனைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். கொழும்பில் ஆட்சியமைப்பதற்கு அரசும் பல திசைகளிலும் வலை வீசிக் கொண்டிருக்கின்றது.

எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாமும் எம் தரப்பில் சகல முயற்சிகளையும் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஓரிரு சுயேச்சைக் குழுக்கள் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஆதரவைத் தெரிவித்துள்ள போதிலும், பெரும்பாலானோர் எம்முடன் இணைந்துள்ளனர்.

ஆட்சியமைத்த பின்னர் ஆளும் தரப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அவர்களது தொகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான நிதியை வழங்குவோம்.

அது இலஞ்சம் அல்ல.

தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளரை அந்தக் கட்சியினரே விரும்பவில்லை.

எனவே, அரசால் தமது மேயரை நியமிக்கக் கூடிய சூழல் இல்லை.

மேயர் தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது தேசிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்கள் வாக்களிப்பைப் புறக்கணிப்பதற்கான வாய்ப்பிருக்கின்றது. எனவே, கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சிகளே ஆட்சியமைக்கும்-என்றார். (அ)

# ஒட்டுசுட்டான் ம.வி. மாணவர்களை துரத்தித் துரத்தி கொட்டிய குளவிகள்!

முல்லைத்தீவு, மே. 31

முல்லைத்தீவு-ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய பாடசாலை வளாகத்துக்குள் நேற்றுக் காலை பாடசாலை சென்ற மாணவர்களுக்கும், ஆசிரியர்களும் குளவிகள் கொட்டிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய வளாகத்துக்குள் கட்டடம் ஒன்றில் தேன்குளவிகள் கூடுகட்டி இருந்துள்ளன.

நேற்று வலயமட்ட விளையாட்டுப்போட்டிகள் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற இருந்த நிலையில் திடீரென தேன் குளவிகள் கலைந்து பாடசாலை, மைதானத்தில் நின்றவர்களை துரத்தி கொட்டியுள்ளன.

இதனால் அச்சமடைந்த மாணவர்கள் அங்கும் இங்குமாக ஓடியுள்ளனர். இப்பாடசாலையின் மாடிக்



கட்டடம் ஒன்றில் பலகாலமாக தேன் குளவிகள் கூடு கட்டி வாழ்வதாக கூறப்படுகிறது. (அ)

## யாழில் பிறப்பு வீதம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே. 31

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடத்தின் முதலாம் காலாண்டில் இறப்புகளை விட பிறப்புகளின் எண்ணிக்கை அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக வடக்குப் பிரதிப் பதிவாளர் நாயகம் பிரபாகர் தெரிவித்துள்ளார்.தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் கோரப் பட்ட தகவலுக்கமைவாக இந்தத் தகவல் வழங்கப்பட் டுள்ளது.

இதன்படி, 2025 ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை யாழ்.மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு எண்ணிக்கை 1572 ஆகவும் பதிவு செய்யப்பட்ட இறப்புகள் 1373 ஆகவும் பதிவாகியுள்ளன.இறப்புகளை விட 199 பிறப்புகள் அதிகமாக பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கடத்த பதுக்கி வைக்கப்பட்ட ஏலக்காய் மீட்பு!

சென்னை, மே. 31

தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக தங்கச்சிமடம் அருகேயுள்ள வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் 175 கிலோ நிறையுடைய ஏலக்காய் நேற்று வெள்ளிக்கிழமை கைப்பற்றப்பட்டது.

கொள்கலன்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 175 கிலோ நிறையுடைய ஏலக்காய் 7 மூடைகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. இதன் மதிப்பு சுமார் 6 இலட்சம் இந்திய ரூபாவென கணிக்கப்பட்டுள்ளது.

தங்கச்சிமடம் பகுதியில் இருந்து இலங்கைக்கு படகுகள் மூலம் ஏலக்காய், சுக்கு, வெளிநாட்டு சிகரெட் உள்ளிட்ட பொருட்கள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், அய்யன்தோப்பு கிராமத்தில் உள்ள வீட்டில் தமிழக பொலிஸார் திடீர் சோதனை மேற்கொண்டுள்ளனர்.சோதனையின் போது, இலங் கைக்கு கடத்தும் நோக்கில் ஏலக் காய் மூடைகள் பதுக்கி வைக்கப் பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவை பறிமு தல் செய்யப்பட்டு தங்கச்சிமடம் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 31.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.